BRAMPTON Service and Information Update

## ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையில் திருமணம் புரிந்து கொள்ளுங்கள்!

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 18, 2022) – ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையில் குடிமக்கள் திருமண வைபவங்களை நடத்த வேண்டும் என்ற அபரிமிதமான ஆர்வத்தை மக்கள் தெரிவித்தமையின் காரணமாக, சனிக்கிழமை செப்டம்பர் 3, 2022 தேதியன்றும் இந்த வைபவம் நடப்பதற்காக காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது என அறிவிப்பதில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பரவசமடைகிறது.

நீங்களும் உங்கள் துணைவரும் சத்திய வாக்குகளைப் பரிமாறியபடி, அழகிய கேஜ் பார்க் கஸீபோ (Gage Park gazebo) வில் அதிகாரபூர்வமாக, உழவர் சந்தையில் வைத்து திருமணம் செய்து கொள்ளலாம்; இதற்கான கட்டணம் $75 மட்டுமே!

குறைவான இடங்கள் மட்டுமே உள்ளன. **ஆகஸ்ட் 24, 2022** அன்று நேரில் வந்து பதிவு செய்துகொள்ளவும்**.**

பதிவு செய்ய, முழுக்கட்டணமும் செலுத்தியே பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்கையில் செல்லத்தக்க ஒரு திருமண சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் அல்லது ($160) பணம் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

திருமண உரிமத்திற்கான முன்பதிவுகளை www.brampton.ca/skiptheline யிலோ அல்லது திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையான வார நாட்களில் காலை 8:30 முதல் மாலை 4 மணி வரை நகர் மன்றத்தில் நேரில் வந்தோ செய்துகொள்ளலாம்.

**திருமண உரிமங்கள்**

உங்கள் திருமணத்திற்காக திட்டமிடுகிறீர்களா? ஒன்ட்டாரியோ மாகாணத்தில் நீங்கள் திருமணம் புரிந்துகொள்ளும் முன்னதாக நீங்கள் திருமண உரிமம் பெறுவது அவசியமாகும். திருமண உரிமம் பெறுவதற்கான தேவைகள் என்னென்ன மற்றும் நேரங்கள் யாவை என்னும் தகவல்களை அறிய ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தை அணுகவும்.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

-30-

**ஊடக தொடர்பு**

ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca